# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021(2022)

## 25B - ஐரோப்பிய வரலாறு

## புள்ளி வழங்கும் திட்டம்

- I பகுதி - 01 x 40 = 40

  II பகுதி - பகுதி A
  1 ஆம் வினா = 12

  பகுதி B, C
  ஒவ்வொரு பகுதியிலிருந்தும்
  ஒரு வினாவையேனும் தெரிவு
  செய்து மூன்று வினாக்கள்
  (16 × 3) = 48

  II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி = 60

இறுதிப்புள்ளி = 40 + 60 = 100

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

යුරෝපා ඉතිහාසය II (I කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி I)
History of Europe II (Part I)

**25 B | T | II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை

சுட்டெண் : ........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ இப்பகுதி 40 வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப** உமது விடையைக் குறித்துக் காட்டுக.

※ பகுதி **I** இற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.

※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்**. விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதேனுமொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை** அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) தேல்ஸ் (2) ஸஃபோ (3) டாசிடஸ்
   (4) யூரிப்பிடீஸ் (5) பிண்டர் (......)

2. (1) டைபர் (2) மொசாரா (3) டெல்பி
   (4) ஆல்பிகேன் (5) பொம்பேயி (......)

3. (1) அக்ரோபொலிஸ் (2) பொலொக்னா (3) பாரிஸ்
   (4) ஒக்ஸ்போர்ட் (5) பாதுவா (......)

4. (1) கல்வினிஸ்ட்கள் (2) லொலாட்கள் (3) பியூரிட்டன்கள்
   (4) தாபரைட்கள் (5) அனபெப்டிஸ்ட்கள் (......)

5. (1) விசிகோதர் (2) ஒஸ்ட்ரோகோத் (3) ஆங்கிலோ சக்சன்
   (4) லொம்பாட்கள் (5) பிராங்க்கள் (......)

6. (1) நிக்கலஸ் கொப்பர்னிகஸ் (2) பிரான்சிஸ்கோ பிசாரோ (3) கலிலியோ கலிலி
   (4) ஜொஹான்னஸ் கெப்லர் (5) ஐசக் நியூட்டன் (......)

7. (1) பொஹிமியன் காலம் (2) டெனிஷ் காலம் (3) ஜெர்மன் காலம்
   (4) சுவீடன் காலம் (5) பிரான்சிய காலம் (......)

| | X | | Y |
|---|---|---|---|
| 16. | (i) ஜூலியஸ் சீசர் | A | இக்காலத்தின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது பேச்சுவார்த்தைகளாலோ பெரும்பான்மையோரின் தீர்மானங்களினாலோ அல்லாது இரத்தத்தினாலும் இரும்பினாலுமே ஆகும். |
| | (ii) பதினான்காம் லூயி | B | நானே புரட்சி |
| | (iii) நெப்போலியன் போனபார்ட் | C | பால்டிக் கடலிலிருந்து அட்ரியாட்டிக் கடல் வரை (ஐரோப்பா) கண்டத்தின் குறுக்கே இரும்புத் திரை ஒன்று இறங்கியுள்ளது. |
| | (iv) ஒட்டோ வொன் பிஸ்மார்க் | D | நான் வந்தேன், நான் பார்த்தேன், நான் கைப்பற்றினேன். |
| | (v) வின்ஸ்டன் சேர்ச்சில் | E | நானே அரசு |

(1) ABECD (2) AEDCB (3) BAECD (4) DEABC (5) DEBAC (.......)

| | X | | Y |
|---|---|---|---|
| 17. | (i) இருண்ட கண்டம் | A | பிரித்தானியா |
| | (ii) புதிய உலகம் | B | ஆபிரிக்கா |
| | (iii) கடைக்காரர்களின் தேசம் | C | இத்தாலி |
| | (iv) புவியியல் வெளிப்படுத்தல் மட்டும் | D | துருக்கி |
| | (v) ஐரோப்பாவின் நோயாளி | E | அமெரிக்கா |

(1) ABDEC (2) BADEC (3) BAECD (4) BEACD (5) CDAEB (.......)

| | X | | Y |
|---|---|---|---|
| 18. | (i) பாஸ்டில் தாக்குதல் | A | ஐக்கிய அமெரிக்க அரசுகள் இரண்டாம் உலகப்போரில் நுழைதல் |
| | (ii) ஸ்பானியப் பிளவை நோய் | B | இரண்டாம் உலகப்போரின் முடிவு |
| | (iii) இளவரசர் பிரான்சிஸ் பேர்டினண்டின் கொலை | C | நெப்போலியன் போனபார்ட்டின் வீழ்ச்சி |
| | (iv) பேர்ள் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்குதல் | D | பிரான்சியப் புரட்சி ஆரம்பம் |
| | (v) ஹிரோஷிமா, நாகசாக்கியில் அணுகுண்டு வீசுதல் | E | முதலாம் உலகப்போர் ஆரம்பம் |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EACDB (5) ECADB (.......)

| | X | | Y |
|---|---|---|---|
| 19. | (i) வி. ஐ. லெனின் | A | செஞ்சட்டை இராணுவம் |
| | (ii) லியோன் ட்ரொட்ஸ்கி | B | மேற்குலகுடன் அமைதியான சகவாழ்வு |
| | (iii) ஜோசப் ஸ்டாலின் | C | கிளாஸ்நொஸ்ட் (திறந்த தன்மை) பெரஸ்ரொய்கா (பொருளாதார மறுசீரமைப்பு) |
| | (iv) நிகிட்டா குருசேவ் | D | ஐந்து ஆண்டுத் திட்டங்கள் |
| | (v) மிக்கேல் கொர்பச்சேவ் | E | புதிய பொருளாதாரக் கொள்கை |

(1) ACEBD (2) AEDBC (3) DEACB (4) EADBC (5) EDACB (.......)

| | X | | Y |
|---|---|---|---|
| 20. | (i) ட்ரிக்வி லீ | A | பர்மா |
| | (ii) டக் ஹமர்ஷீல்ட் | B | நோர்வே |
| | (iii) ஊ தாண்ட் | C | ஆஸ்திரியா |
| | (iv) குர்ட் வால்ட்ஹெய்ம் | D | பேரு |
| | (v) ஜேவியர் பெரஸ் டி குவெல்லர் | E | சுவீடன் |

(1) BEACD (2) CABED (3) CEABD (4) DECBA (5) EDABC (.......)

Department of Examinations - Sri Lanka

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**21. கிரேக்க நகர அரசுகள்**

(1) கிரேக்க நகர அரசு 'போலிஸ்' என்று அழைக்கப்பட்டது.
(2) கிரேக்க நகர அரசுகள் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் தோன்றின.
(3) கிரேக்க அரசுகள் பரப்பளவு, சனத்தொகை ஆகிய இரண்டிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்தன.
(4) பெரிக்கிளிசின் காலத்தில் அதீனிய ஜனநாயகம் முழுமையான பூரணத்துவம் அடைந்தது.
(5) பெலொபொனீசியன் போர் கிரேக்கர்களுக்கும் பாரசீகர்களுக்கும் இடையில் உருவானது. (......)

**22. கிறிஸ்தவ சமயம்**

(1) கிறிஸ்தவ சமயம் ஒரு தெய்வக் கோட்பாட்டு சமயமாகும்.
(2) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரை உரோம ஆட்சியாளர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.
(3) கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவ சமயம் உரோமப் பேரரசு முழுவதும் பரவியிருந்தது.
(4) டேசியஸ் என்ற உரோமப் பேரரசன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதை முடிவுக்குக் கொண்டு வந்தான்.
(5) தியடோசியஸ் கிறிஸ்தவ சமயத்தை உரோமப் பேரரசின் அரச சமயம் ஆக்கினான். (......)

**23. மானிய முறை**

(1) மத்திய கால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார முறை மானிய முறை எனக் குறிப்பிடப்பட்டது.
(2) மானிய முறை பிராங்க இராச்சியத்தில் ஆரம்பமாகி ஐரோப்பாவின் ஏனைய பிரதேசங்களுக்குப் பரவியது.
(3) மானிய முறையின் கீழ் மத்தியதர வகுப்பினர் அரசிடமிருந்து காணிகளைப் பெற்று அரசனுக்குப் படைவீரர்களை வழங்கினர்.
(4) மானிய முறையானது பண்ணை முறை மீது கட்டியெழுப்பப்பட்டது.
(5) மானிய முறையின் கீழ் அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட்டதாக இருந்தது. (......)

**24. சமயச் சீர்திருத்தம்**

(1) சமயச் சீர்திருத்தம் ஜேர்மனியில் ஆரம்பமானது.
(2) சமயச் சீர்திருத்தம் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு வழியேற்படுத்தியது.
(3) கத்தோலிக்க திருச்சபையில் இருந்த ஊழல்கள் சமயச் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு பிரதான காரணமாகும்.
(4) சமயச் சீர்திருத்தத்தின் தந்தையாக மாட்டின் லூதர் கருதப்படுகின்றார்.
(5) 1517 இல் தொண்ணூற்றி ஐந்து விடயங்கள் அடங்கிய ஆவணத்தை விட்டன்பேர்க் தேவாலயக் கதவில் பொருத்துதல், சமயச் சீர்திருத்தத்தின் ஆரம்பத்தை அடையாளப்படுத்தியது. (......)

**25. முதலாம் உலகப்போர்**

(1) முதலாம் உலகப் போர் 1914 இல் ஆரம்பமானது.
(2) ஜேர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா என்பன மத்திய வல்லரசுகள் எனப்பட்டன.
(3) ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க அரசுகள் என்பன நேச நாடுகள் எனப்பட்டன.
(4) வேர்சேல்ஸ் உடன்படிக்கை ஜேர்மனியுடன் கைச்சாத்திடப்பட்டது.
(5) புனித ஜேர்மேன் ஒப்பந்தம் துருக்கியுடன் கைச்சாத்திடப்பட்டது. (......)

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்க.

(A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் ........................ 1 எனவும்
(A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ........................ 2 எனவும்
(B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ........................ 3 எனவும்
(C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின் ........................ 4 எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .......... 5 எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |



Department of Examinations - Sri Lanka

26. 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
   (A) நாடுகாண் கடற் பயணங்கள் ஆரம்பத்தில் போர்த்துக்கேயராலும் ஸ்பானியர்களாலும் மேற்கொள்ளப்பட்டன.
   (B) நாடுகாண் கடற் பயணங்களின் பிரதான நோக்கம் ஆசியாவை அடைவதற்குப் புதிய பாதையைக் கண்டுபிடித்தல் ஆகும்.
   (C) பேர்டினன் மகலன் அமெரிக்க கண்டத்தைக் கண்டுபிடித்தான்.
   (D) வோல்டர் ராலி உலகத்தைச் சுற்றிப் பயணம் செய்தார். (......)

27. 1688 - 89 மகோன்னதப் புரட்சி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
   (A) இரண்டாம் ஜேம்ஸ் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டார்.
   (B) மேரியும் ஒரேஞ்ச் வில்லியமும் இங்கிலாந்தின் இணைந்த ஆட்சியாளர்கள் ஆகினர்.
   (C) மகோன்னதப் புரட்சி இங்கிலாந்தில் அரசியல் பாராளுமன்ற முடியாட்சிக்கு அடித்தளமிட்டது.
   (D) உரிமை மனுவானது சட்டத்துடன் இணைக்கப்பட்டது. (......)

28. றிச்சலியூ தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
   (A) பதினைந்தாம் லூயியின் முதல் மந்திரியாகப் பணியாற்றினார்.
   (B) அரசனதும் மத்திய அரசாங்கத்தினதும் அதிகாரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தார்.
   (C) பிரபுக்களின் அதிகாரங்கள், சலுகைகள் என்பவற்றைத் தாக்கினார்.
   (D) ஹியூகனொட்களுக்கு ஆதரவு வழங்கினார். (......)

29. பழைய அதிகாரத்துவ ஆட்சிமுறை (Ancien Regime) பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
   (A) பழைய அதிகாரத்துவ ஆட்சி முறையின் கீழ் பிரான்சிய சமூகம் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
   (B) பழைய அதிகாரத்துவ ஆட்சி முறையின் கீழ் குடியாட்சி நிலவியது.
   (C) மதகுருமார், பிரபு வகுப்பினர் ஆகிய இரு வகுப்பினரும் விசேட சலுகைகளை அனுபவித்தனர்.
   (D) பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஈடன் உடன்படிக்கை பிரான்சின் பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றுவதற்கு உதவியது. (......)

30. பனிப்போர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
   (A) ஐக்கிய அமெரிக்க அரசுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நிலவிய அரசியல் மற்றும் சித்தாந்தக் கோட்பாடுகளின் மோதலே 'பனிப்போர்' எனப்படுகின்றது.
   (B) வட அத்திலாந்திக் உடன்படிக்கை அமைப்பு 1949 இல் தாபிக்கப்பட்டது.
   (C) 1955 இல் வார்சோ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
   (D) 1989 டிசெம்பர் மாதத்தில் அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் தலைவர்கள், பனிப்போர் உத்தியோகபூர்வமாக முடிவுற்றதாகப் பிரகடனப்படுத்தினர். (......)

- 31 தொடக்கம் 35 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

31. மிலான் கட்டளையை பிரகடனப்படுத்திய உரோமப் பேரரசன் யார்?
   (1) மார்க்கஸ் அவுரேலியஸ் (2) டயக்கிளீஷியன் (3) வலேரியன்
   (4) கொன்ஸ்டன்ரைன் (5) தியடோசியஸ் (......)

32. ஏழாண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த சமாதான உடன்படிக்கை எது?
   (1) ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கை
   (2) பரிஸ் சமாதான உடன்படிக்கை
   (3) அமியன்ஸ் சமாதான உடன்படிக்கை
   (4) போட்ஸ்மத் சமாதான உடன்படிக்கை
   (5) உட்ரெக்ட் சமாதான உடன்படிக்கை (......)

Department of Examinations - Sri Lanka

33. பயன்பாட்டுவாதக் கோட்பாட்டை விரித்துரைத்தவர் யார்?
(1) தோமஸ் மல்தூஸ் (2) டேவிட் ரிக்காடோ (3) ஜெரமி பெந்தம்
(4) றொபேட் ஓவன் (5) பிரெடரிக் ஏங்கல்ஸ் (……)

34. ஏழு கிழமைப் போர் எந்த நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டது?
(1) பிரான்சு, இங்கிலாந்து (2) ரஷ்யா, துருக்கி (3) ஆஸ்திரியா, சாடினியா
(4) ஆஸ்திரியா, பிரஷ்யா (5) பிரான்சு, பிரஷ்யா (……)

35. அனைத்து மனிதர்களும் உயர்ந்த மட்டத்திலான சுகாதாரத்தை அடைவதற்கான இலக்குடன் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் விசேட முகவராக இருப்பது எது?
(1) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
(2) உலக சுகாதாரத் தாபனம் (WHO)
(3) உணவு விவசாயத் தாபனம் (FAO)
(4) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF)
(5) ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் வேலை முகவர் (UNRWA) (……)

- 36 தொடக்கம் 40 வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விளக்குகின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| 36. | புராதன கிரேக்கர்கள் பிரபஞ்சத்தில் மிக முக்கியம் வாய்ந்த பிராணியாக மனிதனை மேன்மைப்படுத்தினர். | கி. மு. 8 ஆம் நூற்றாண்டில் [illegible] என்ற பெயருடைய பாடசாலையை ஆரம்பித்தார் என்று நம்பப்படுகின்றது. | (………) |
| 37. | அரசர்களின் தெய்வீக உரிமை என்பது அரசர்கள் கடவுளுக்கு மட்டுமே பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று பிரகடனப்படுத்திய கோட்பாடு ஆகும். | 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சில் 14 ஆம் லூயியின் முடியாட்சி தெய்வீக உரிமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. | (………) |
| 38. | தனது மக்களின் சமயமாக ஏதாவது லூதரனிய கத்தோலிக்க சமயத்தையோ தெரிவு செய்வதற்கு ஜேர்மன் இளவரசர் களுக்கும் சுதந்திரம் உண்டு என்று நான்றிஸ் பிரகடனம் பிரகடனப்படுத்தியது. | 1806 இல் நெப்போலியன் போனபாட் புனித உரோம பேரரசை இல்லாதொழித்தான். | (………) |
| 39. | புரட்சி ஆண்டு என அழைக்கப்பட்ட 1848 நவீன ஐரோப்பிய வரலாற்றின் திருப்புமுனை எனக் கருதப்படுகின்றது. | 1848 ஆம் ஆண்டு பிரான்சிய புரட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட புரட்சியின் இறுதியாகக் குறிப்பிடப்படுவதுடன் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வெற்றிகரமான தேசிய இயக்கங்களின் ஆரம்பமாகவும் குறிப்பிடப்படுகின்றது. | (………) |
| 40. | இலண்டன் உடன்படிக்கை ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைத் தாபித்தது. | 1949 இல் சார்ள்ஸ் டி கோல் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் முதலாவது சான்சிலராக நியமிக்கப்பட்டார். | (………) |

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: 25B

විෂයය / பாடம்: ஐரோப்பிய வரலாறு

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 5 | 31. | 4 |
| 02. | 5 | 12. | 5 | 22. | 4 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 3 | 33. | 3 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 3 | 25. | 5 | 35. | 2 |
| 06. | 2 | 16. | 5 | 26. | 1 | 36. | 1 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 5 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 3 | 38. | 4 |
| 09. | 5 | 19. | 4 | 29. | 2 | 39. | 5 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 5 | 40. | 3 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40



Department of Examinations - Sri Lanka

All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | | | |
|---|---|---|---|
| යුරෝපීය ඉතිහාසය II<br>ஐரோப்பிய வரலாறு II<br>History of Europe II | 25 B | T | |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..................



Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

යුරෝපීය ඉතිහාසය II (II කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி II)
History of Europe II (Part II)

**25 B** **T** **II**

## ஐரோப்பிய வரலாறு - கிரேக்க உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* முதலாம் வினா கட்டாயமானது.
* முதலாம் வினாவுக்கும் **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

### பகுதி A

1. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழ் தரப்பட்டுள்ள **சகல இடங்களையும் குறித்துப்** பெயரிடுக.

(i) மத்திய தரைக் கடல (ii) கிரீட் (iii) உரோம்
(iv) டன்யூப் நதி (v) கஸ்பியன் கடல் (vi) போ நதி
(vii) பொஸ்பரஸ் நீரிணை (viii) போலந்து (ix) ஜெனீவா
(x) இபேரியா (xi) வியென்னா (xii) டான்சிக்

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

### பகுதி B

2. நகர அரசாக இருந்து பாரிய பேரரசாக உரோமின் ஆதிக்கப் பரம்பலின் பிரதான கட்டங்களை எடுத்துக்காட்டுக. (16 புள்ளிகள்)

3. "மறுமலர்ச்சி, அடிப்படையில் கலாசார இயக்கமாகும்."
(i) மறுமலர்ச்சி ஆரம்பித்த நாட்டின் பெயரைத் தருக. (01 புள்ளிகள்)
(ii) மறுமலர்ச்சிக்கு ஆதரவு வழங்கிய **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(iii) மறுமலர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமான விடயங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
(iv) கலை, மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி கலாசார இயக்கமாக மறுமலர்ச்சியின் முக்கியத்துவத்தை ஆராய்க. (08 புள்ளிகள்)

4. பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தி அமெரிக்கப் புரட்சி பற்றி விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க.
(i) புரட்சியின் பின்னணி (08 புள்ளிகள்)
(ii) அதன் விளைவுகள் (08 புள்ளிகள்)



Department of Examinations - Sri Lanka

5. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) கிரேக்க சமயமும் தத்துவமும்
   (ii) ஏழாம் ஹென்றி அல்லது எட்டாம் ஹென்றியின் கீழ் இங்கிலாந்து
   (iii) இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சியின் பின்னணி
   (iv) நெப்போலியன் போனபாட்டின் உள்நாட்டுக் கொள்கை

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

6. விக்டர் இமானுவேல் மன்னன், கவூர், கரிபோல்டி ஆகியோரின் பங்களிப்பை மதிப்பீடு செய்து 1848 இலிருந்து 1870 வரையுள்ள காலப்பகுதியில் இத்தாலியை ஐக்கியப்படுத்திய முக்கிய சந்தர்ப்பங்களைப் பரிசீலிக்குக.
(16 புள்ளிகள்)

7. "1917 இல் போல்ஷெவிக் புரட்சி ரஷ்யாவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்தியது."
   (i) 1917 வரை ரஷ்யாவை ஆட்சி செய்த இறுதி சார் மன்னனின் பெயரைத் தருக. (01 புள்ளிகள்)
   (ii) போல்ஷெவிக் புரட்சியின் தலைவர்கள் இருவரின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (iii) போல்ஷெவிக்குகள் ரஷ்யாவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதுவான காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (iv) 1917 போல்ஷெவிக் புரட்சி ரஷ்யாவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்திய விதத்தைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

8. இடைப்பட்ட போர்க் காலத்தில் (Inter war) ஜேர்மனியில் நாசிசம் எழுச்சி பெறுவதற்கு ஏதுவான முக்கிய காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.
(16 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) வியன்னா மகாநாடு
   (ii) பிஸ்மார்க்
   (iii) பெனிட்டோ முசோலினி
   (iv) 1980 வரை சமாதானத்தைப் பாதுகாக்கும் நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபையின் வகிபாகம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

※ ※ ※

Department of Examinations - Sri Lanka

# ஐரோப்பிய வரலாறு - கிரேக்க உரோம காலம் முதல் கி.பி. 1989 ஆம் ஆண்டு வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினாவுக்கும் B - C பகுதிகளில் இருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து, மேலும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி A

**(01) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறஉருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | மத்திய தரைக் கடல் | (ii) | கிறீட் | (iii) | உரோம் |
| (iv) | டான்யூப் நதி | (v) | கஸ்பியன் கடல் | (vi) | போ நதி |
| (vii) | பொஸ்பரஸ் நீரிணை | (viii) | போலந்து | (ix) | ஜெனீவா |
| (x) | நோர்வே | (xi) | லிவர்பூல் | (xii) | டான்சிக் |

**(சரியாகக் குறித்துப் பெயரிட்டால் ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம்)**

## பகுதி B

**(02) நகர அரசாக இருந்து பரந்த பேரரசாக உரோமின் ஆதிக்கப் பரம்பலின் பிரதான கட்டங்களை எடுத்துக்காட்டுக.**

- கி.மு 7 ஆம் நூற்றாண்டில் இத்தாலிய குடா நாட்டின் மத்திய பகுதியில் தைபர் நதிக்கரைக்கு அருகில் பாதுகாப்பான இடமொன்றில் சிறிய இலத்தின் இராச்சியமாக உரோம நகர ஆட்சி தாபிக்கப்பட்டமை.

- ஆதிக்கப் பரம்பலின் ஆரம்ப கட்டத்தில் உரோம் இலத்தின் இராச்சியங்களின் தலைமைத்துவம் பெற்று அந்த இராச்சியங்களின் பாதுகாவலனாக இருந்ததுடன் வட இத்தாலிய பிரதேசங்களில் ஆதிக்கத்தைப் பரவச் செய்தலும்

- கி.மு 395 ஆகும் போது எட்ரிஸ்கன்மார் வெற்றி பெறுதல்.

- கி.மு. 343- 275 இடைப்பட்ட காலத்தில் சம்னயிட் போர் (இது தனியே சமனயிட்களுடன் மட்டுமல்லாது வடக்கே இலத்தின் இராச்சியங்கள் கோல்வருன், தெற்கே கிரேக்கர்கள் இலத்தின் இராச்சியங்களின் உதவிக்கு வந்த மசிடோனியப் படை என்பவற்றுடனும் போர் நடைபெற்ற காலமாகும்) இறுதியில் கி.மு 275 ஆகும் போது போ நதிக்கு வெளியே முழு இத்தாலியும் உரோமரின் ஆதிக்கத்துக்கு உரித்தானமை.

- அதிகாரப் பரவலின் இக்கட்டமானதும் முக்கியமானதுமான சந்தர்ப்பம் கி.மு 264-202 இடைப்பட்ட காலத்தில் காதேஜஷுடன் நடத்திய பியூனிக் போர் காதேஜய நேரடியாக இணைத்துக் கொள்ளாத போதும் சிசிலி, சார்டினீயா கோஸிசா என்பவற்றைக் கீழ்ப்படுத்தி ஸ்பானியாவையும் உரோம நிர்வாகத்துக்கு உரிமையாக்குதல்.

- அடுத்த சந்தர்ப்பம் கி.மு 197 இலிருந்து 146 வரை தெற்கே கிரேக்க பௌர அரசுகளில் பரவுதல்.

Department of Examinations - Sri Lanka

- ஆரம்பத்தில் மஸிடோனிய ஆதிக்கத்தைப் பெற்று சில அரகளின் பாதுகாப்பாளராக இருந்தமை. கிரேக்க பெரை அரசுகளுக்கிடையிலான கலகங்களில் தலையீடு செய்தல் இறுதியில் அவற்றை அடிமைப்படுத்தி இணைத்துக் கொள்ளுதல்.

- கி.மு 146 இன் பின்னர் சிசிலி, சார்னியா, கோர்சிக்கா, ஸ்பானியா ஆபிரிக்கா என்று பரந்த பிரதேசத்தில் தெற்கிலும் மேற்கிலும் பரவியமை.

- இவ்வாறே வடக்கே கோல் வருண்மாரைத் தோற்கடித்து அதிலிருந்து பிரித்தானிய தீவு வரை ஆதிக்கத்தைப் பரவச் செய்திருந்தமை

**(16 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

3) **“மறுமலர்ச்சி, அடிப்படையில் கலாசார இயக்கமாகும் ”**

(i) **மறுமலர்ச்சி ஆரம்பித்த நாட்டின் பெயரைத் தருக.**

இத்தாலி **(01 புள்ளி)**

(ii) **மறுமலர்ச்சிக்கு ஆதரவு வழங்கிய இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- குடும்பம் – மிலானோஹி சபோர்ஸா
  பிளோன்ஹி மெட்சி
  பெராராஹி எஸ்டே
  மான்டுவாஹி கொன்சாகா .

- தனிநபர்கள் – iv. ஆம் நிக்கலஸ்
  vi. ஆம் அலெக்சாந்தர்
  ii. ஆம் ஜாலியஸ்
  x . ஆம் லியோ என்னும் பாப்பாண்டவர்கள்.

**(02 புள்ளிகள்)**

(iii) **மறுமலர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமான விடயங்கள் பற்றிச் சுருக்கமாக குறிப்பிடுக.**

- இத்தாலியில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு உள்ளகக் காரணிகள் போன்றே வெளிப்புறக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

**உள்ளகக் காரணிகள்**

- இத்தாலியின் பொருளாதார, சமூக, அரசியல் பின்னணி
  1. மானிய முறை வீழ்ச்சியடைந்திருந்தமை.
  2. வர்த்தகம் விருத்திபெற்றிருந்தமை.
  3. வர்த்தக நகரங்கள் விருத்தியடைந்திருந்தமை .
  4. பணம் படைத்த நடுத்தர வகுப்பினர் தோன்றுதலும் அவர்களின் ஆதரவு பெறப்படுதலும்
  5. இத்தாலியின் பௌர அரசுகளில் இருந்த இளவரசர்களும் மதகுருமார் சிலரும் கலை நடவடிக்கைகளுக்கு ஆதரவு காட்டியமை.

- மேற்கு ஐரோப்பாவில் வேறு எந்த நாட்டிலும் காண முடியாத விதத்தில் கௌரவம் வழங்கும் மதிப்பளிக்கும் கலாச்சாரம் இத்தாலியில் நிலவியமை.

- புராதான உரோம நாகரிகத்தின் ஞாபகார்த்தங்கள் எச்சங்களாக நிலவியமை.

- இத்தாலியின் பல்கலைக்கழங்களில் சமய தர்மங்களை விடவும் சட்டம் மருத்துவம் ஆகிய பாடங்களைக் கற்பதற்கு முன்வந்தமை இதனால் லௌகிக மற்றும் தர்க்கரீதியானவற்றுக்கு அதிக சந்தர்ப்பங்கள் நிலவுதல்.

Department of Examinations - Sri Lanka

**வெளிப்புறக் காரணிகள்**

1453 இல் கொன்ஸ்தாந்தினோப்பிள் நகரம் தருக்கியர் கைவசமானதன் காரணமான அங்கு இருந்த கிரேக்க உரோம நூல்களை எடுத்துக் கொண்டு கற்றறிந்தவர்கள் இத்தாலிக்கு சென்றனார். கிரேக்க உரோம அறிவு இத்தாலிக்கு கடத்தப்பட்டது.

**(05 புள்ளிகள்)**

(iv) **கலை, மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி கலாசார இயக்கமாக மறுமலர்ச்சியின் முக்கியத்துவத்தை ஆராய்க.**

**கலைகள்**

- கலைகள் தொடர்பாக மறுமலர்ச்சி ஏற்படுதல், கட்டிட நிர்மாணக் கலை, சிற்பக் கலை தொடர்பில் கிரேக்க உரோம சம்பிரதாயங்களை முன்மாதிரியாகக் கொள்ளுதல்.
- சித்திரக் கலையில் பெருமளவில் மறுமலர்ச்சிக்கு ஏற்படுதல். பிளோரன்ஸ் நகரம் சித்திரக் கலையின் மையமாகியது.
- பிரசித்தி பெற்ற மறுமலரச்சிக் கலைஞர்களும் கலைப் படைப்புக்களும்.
- டொனெடெலோ (டேவிட்) மைக்கல்ஏஞ்சலோ (டேவிட், மோசெஸ், பியெடா சிஸ்ரைன் தேவாலயத்தின் கூரையில் உள்ள சித்திரங்கள் ) ஜியோடோ ( மடோனா ) மஸன்ஷியோ ( ஆதாமும் ஏவாளும் ) பொட்செவி (வீனஸின் பிறப்பு) லியனாடோ டாவின்சி (மோனாலிசா, இறுதி இராப் மோசன விருந்து)

**மொழியும் இலக்கியமும்**

- கிரேக்க இலத்தின் மொழிகளில் மறுமலர்ச்சி ஏற்படுதல் மொழி மானிடவியல் கற்றல் விருத்தியடைதல்.
- மானிட வாதம் எழுச்சி பெறுதலும் மானிடவியல் எழுத்தாளர்களும் தோற்றம் பெறுதல். இதன் காரணமாக இலக்கிய மறுமலர்ச்சி ஏற்படுதல் பிரான்சிஸ் பெட்ராக், தான்டே அலிகியர் கியோவன்தி பொகஸியோ

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**4) பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தி அமெரிக்கப் புரட்சி பற்றி விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க**

(i) **புரட்சியின் பின்னணி**

**பொருளாதார காரணிகள்**

- இங்கிலாந்து அமெரிக்காவில் ஆங்கிலேய குடியேற்றங்கள் தொடர்பாக பின்பற்றிய வியா-பாரக் கொள்கை. இதன் பிரதான நோக்கம் அமெரிக்க குடியேற்றங்களைத் தமது உற்பத்திக்கான சந்தைக்ககானதாகவும் தமது நுகர்வுக்கும் கைத்தொழிலுக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் இடமாகவும் வைத்திருத்தல்.

- இங்கிலாந்தில் இந்தக் கொள்கையை நாவாய் சட்டம் மற்றும் வர்த்தக சட்டம் மூலம் நடைமுறைப்படுத்தியமை.

- இங்கிலாந்தில் உற்பத்தியாக்கப்படும் பொருள்கள் சிலவற்றைக் குடியேற்றங்களில் உற்பத்தி செய்யத் தடை செய்தது.

- பெயரிடப்பட்ட பொருட்கள் என அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் இங்கிலாந்தில் மட்டுமே விற்பனை செய்யப்படல் வேண்டும் என்று கட்டளை விதித்தமை (புகையிலை , பருத்தி, சீனி)

- குடியேற்றங்களிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருட்களினால் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இங்கிலாந்தினால் விதிக்கப்பட்ட விலைக்கே குடியேற்றங்களில் விற்பனை செய்தல்.

- குடியேற்றங்களில் பொருட்கள் போக்குவரத்து இங்கிலாந்துக்கு உரித்தான கப்பல்கள் மட்டுமே நடத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடுதல். குடியேற்றவாசிகள் இந்த பொருளாதாரக் கொள்கைகளுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தமை.

**(08 புள்ளிகள்)**

(ii) **அதன் விளைவுகள்**

- சுதந்திர போராட்டத்தில் வெற்றியடைந்த பின்னர் ஐக்கிய அமெரிக்க அரசுகள் என்ற பெயருடைய சுதந்திர இராச்சியம் தோன்றுதல்.

- முதலாவது பிரித்தானிய பேரரசின் முடிவை அடையாளப்படுத்தலும் பிரித்தானிய பேரரசுக் கொள்கை மாற்றமடைதலும்.

- பிரித்தானிய பேரரசுக்கு எதிராகப் போரிட்டு சுதந்திரம் பெற்ற முதலாவது இராச்சியமாக ஐ.அ. அரசுகள் இருத்தல்.

- ஜனநாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட சமஷ்டிக் குடியரசு ஏற்படுதல்.

Department of Examinations - Sri Lanka

- அடிப்படை மனித உரிமைகள் தொடர்பில் அரசியல்யாப்பைத் தயாரித்தவர்கள் கவனத்தில் கொள்ளுதல்

- பிற்கால அரசியல் நிகழ்வுகள்,அபிவிருத்தி தொடர்பில் தாக்கம் உதாரணம் : பிரான்சியப்புரட்சி, தென் அமெரிக்காவில் ஸ்பானிய போர்த்துக்கேய விரோத சுதந்திர போரட்ட இயக்கங்கள்.

- உலகின் முதலாவது எழுதப்பட்ட கூட்டாட்சி அரசியல்முறை தோன்றுதல்.

- அமெரிக்க சுதந்திரப் போர் பிரான்சியப் புரட்சி ஏற்படுவதில் தாக்கம் செலுத்தியமை

**அரசியல் காரணிகள்**

- இங்கிலாந்து பாராளுமன்றம் மூலம் குடியேற்றங்களில் வரி வசூலிக்கப்படுதல் தொடர்பாக குடியேற்றவாசிகளிடம் நிலவிய எதிர்ப்பு படிப்படியாக இங்கிலாந்தின் ஆட்சியிலிருந்து அரசியல் சுதந்திரம் பெறும் நடவடிக்கையாக மாற்றம் பெற்றமை.

- ஏழாண்டு போரின் (1756-1763) பின்னர் ஆங்கிலேயக் குடியேற்றங்களுக்கு இருந்த பிரான்சின் அச்சுருத்தலும் நீங்கியதனால் ஆங்கிலேய இராணுவத்தின் பாதுகாப்பு முன்னர் போல குடியேற்றவாசிகளுக்கு தேவையில்லாது இருந்தமை.

- எனினும் ஆங்கிலேயப் பாராளுமன்றம் அமெரிக்காவில் இருந்த குடியேற்றவாசிகளின் பிரதி நிதிகள் கொண்ட சட்டசபையின் அனுமதியின்றி ஆங்கிலேயே இராணுவத்தை பராமரிப்பதற்கென பிரகடனப்படுத்தி புதிய வரி விதித்தல் டவுண்செண்ட்வரி, கண்ணாடிவரி, முத்திரை வரி, தேயிலை வரி என்பனவற்றை விதித்தத மட்டுமன்றி இவற்றை கடுமையாக நடுமுறைப்படுத்தவும் முயற்சித்தமை.

- குடியேற்றவாசிகளின் ஆர்ப்பாட்டங்களினால் சில வரிகளை நீக்கிவிட்ட போதுடம் குடியேற்றங்களில் வரி அறவிடும் உரிமை இங்கிலாந்தும் பாராளுமன்றத்துக்கும் இருப்பதாக பிரகடனப்படுத்தி தேயிலை வரியை மட்டும் நீக்காதிருந்தமை.

- எனினும் இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு உரிய அந்த உரமையை ஏற்றுக்கொள்ளாது குடியேற்ற வாசிகள் பொஸ்ரன் துறைமுகத்தில் இருந்த தேயிலை பெட்டிகளை கடலில் வீசியெறிந்து (பொஸ்ரன் தேநீர் விருந்து) பிரதிநிதித்துவமில்லையேல் வலி இல்லை) என்ற போர்வாசகத்தின் கீழ் அமெரிக்க சுதந்திரப் போராட்டம் 1775 இல் ஆரம்பமாகுதல்.

- 1775 இவ் இரு சாராருக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுதல் 1776 ஜுலை 4 ஆம் திகதி குடியேற்ற வாசிகள் அமெரிக்க சுதந்திரம் பிரகடனத்தை வெளியிடுதல் 1783 இல் குடியேற்ற வாசிகள் இங்கிலாந்து இராணுவ த்தைத் தோற்கடித்து அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெறுதல்.

**(08 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

**05) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

(i) **கிரேக்க சமயமும் தத்துவமும்**

(ii) **ஏழாம் ஹென்றி அல்லது எட்டாம் ஹென்றியின் கீழ் இங்கிலாந்து.**

(iii) **இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சியின் பின்னணி**

(iv) **நெப்போலியன் போனபாட்டின் உள்நாட்டுக் கொள்கை.**

**(08 x 2 = 16 புள்ளிகள்)**

## (i) கிரேக்க சமயமும் தத்துவமும்

- பல்தெய்வக் கோட்பாடு நிலவியமை
- கடவுளர் பரம்பரை பற்றி நம்பிக்கை கொண்டிருந்தமை. கியுஸ் (வானத்தின் கடவுள்) பிரதானமாகக் கொண்ட தெய்வங்களின் குழு
- கிரேக்க தெய்வங்களிடையே குறிப்பிட்டதொரு பதவியையும் காணக்கூடியதாயிருத்தல். அது போலவே அவர்களிடையே உறவு முறையும் நிலவியதாக நம்பப்படுதல்.
- கியுஸ் – வானத்தின் அதிபதி (கடவுளரின் தலைவன்)
- ஹெரானா – கியுஸ் கடவுளின் மனைவி
- அதீனா – (கியுஸ் கடவுளின் மகள்) ஞானத்தின் அதிபதி
- ஏரிஸ் – போருக்கு அதிபதி ஹெரானாவின் மகன்
- ஹர்கியூலஸ் – உலகைத் தாங்கி இருப்பவன் (கியுஸ் கடவுளின் மகன்)
- அப்பலோ – சூரியக் கடவுள் (கியுஸ் கடவுளின் மகன்)
- பொசயிடன் – சமுத்திரத்தின் அதிபதி (கியுஸின் சகோதரன்)
- அப்ரடயட் – காதலுக்கு அதிபதி
- ஆட்மீஸ் – சந்திரன் கடவுள் (வேட்டையாடுதலுக்கு அதிபதி)
- தெங்வங்கள் ஒலிம்பஸ் மலையில் வசிப்பதாக நம்பப்படுதல்.
- எல்லா பௌர அரசுகளுக்கும் அதிபதியான தேவி அல்லது தெய்வம் இருந்தமை.
- கியுஸ் – ஒலிம்பியா
- அதீனா – அதென்ஸ்

Department of Examinations - Sri Lanka

- அப்பலோ - டெல்பி
- அப்ரடயிட் - கொரிந்து

- இயற்கை பொருட்களுக்கும் தெய்வத்தன்மை அளித்து வழிபாடுகள் செய்தமை. எனினும் எனினும் கிரேக்கர்களிடையே தெய்வங்கள் பற்றி நிலவிய பயம் பெருமளவில் குறைவாக இருந்தமை.

- பலி கொடுத்தலும் எதிர்வு கூறுதலும் (டெல்பி)

- சமய ஒருமைப்பாடு நிலவியமை.

- கிரேக்க சமய சுதந்திரம் சிந்தனைகளுக்கு தடை ஏற்படுத்தாமை.

- பல்வேறு கலைகளின் முன்னேற்றத்துக்கு சமயமும் ஆதரவாக இருந்தமை. (தேவாலயங்கள் கட்டுவித்தல் பார்தினொன்)

**தத்துவம்**

- கிரேக்க நாகரிக காலத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த துறையாகக் தத்துவங்களை குறிப்பிடப்படுகின்றமை

- தத்துவங்களில் பல விடயங்கள் அடங்கியுள்ளன (பௌதிக விஞ்ஞானம், வானியல், தருக்க சாஸ்திரம் ஆகியவை)

- தர்க்கரீதியாகவும், அறிவியல்ரீதியாகவும் இயற்கைத்தன்மை, மனித சமூகம் என்பவற்றை கற்பதற்கு முயற்சி செய்தல் கிரேக்க தத்துவத்தில் காணக்கூடிய சிறப்பம்சமாகும்

- ஆரம்ப காலத்து தத்துவவியலாளர்கள்– தேலிஸ் அனெக்சிமன்டர் அனெக்சிமினிஸ்

- குதர்க்க வாதிகள்

- சோகரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில்.

**(08 புள்ளிகள்)**

## (ii)ஏழாம் ஹென்றி அல்லது எட்டாம் ஹென்றியின் கீழ் இங்கிலாந்து.

- 1485 பொஸ்ரன் போராட்டத்தில் வெற்றி பெற்ற இலங்கஸ்டிரியன் வம்சத்தவரான ஹென்றி லங்கஸ்டிரினுக்கும் யோர்க் பரம்பரைக்கும் இடையிலான ரோசா யுத்ததை முடிவுக்குக் கொண்டு வருதல்.
- ரோசா யுத்தத்தில் வெற்றி பெற் பின்னர் இங்கிலந்தின் அரசனாகுதல்

- தியூடர் என்ற புதிய அரசவம்சம் ஆரம்பமாகுதல்.

- யோர்க் பரம்பரைக்கும் உரிய எலிசபெத்தைத் திருமணம் செய்து இங்கிலாந்தில் ஐக்கிய இரச்சியத்தைக் கட்டியெழுப்புதல்.

Department of Examinations - Sri Lanka

- பிரபுக்களின் ஆதிக்கம் வீழ்ச்சியடைவதற்குச் செயற்படுதல்
- தனியார் உத்தியோகபூர்வ படையைத் தடை செய்தல்
- ஸ்ரார் சேம்பர் என்ற விசேட நீதி மன்றத்தைத் தாபித்தல்.
- மத்தியதர வகுப்பினரை பிரிவு கவுன்சில் மற்றும் வேறு நீதிமன்ற சபைகளிலும் அரசின் உயர்பதவிகளுக்கும் நியமித்தல்.
- பாராளுமன்றத்தை மன்னனுக்கு கீழ்ப்பட்ட நிறுவனமாக்குதல்.
- வெடிமருந்துகளின் தனி உரிமையை மன்னன் பெற்றுக் கொள்ளுதல்.
- திருமண தொடர்பினால் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டமை.
- யோர்க் வம்சத்துக்குரிய எலிசபெத்தைத் திருமணம் செய்தல்.
- ஸ்பானியாவின் பேர்டினனட் – இஸபெல்லாவின் மகனான கதரின் இளவரசியை தனது மூத்த மகனான ஆதர் இளவரசனுக்கு விவாகம் செய்வித்தமை. இறந்ததின் பின்னர் அந்த இளவரசியைத் தனது இரண்டாவது மகனான ஹென்றிக்குத் திருமணம் செய்து வைத்தல்.
- ஸ்கொட்லாந்தில் நான்காவது ஜேம்ஸ்மன்னனுக்குத் தனது மகளான மார்கிரட்டைத் திருமணம் செய்வித்தல்.
- பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டமை.
- கம்பளி வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு பேர்கண்டியுடன் 1506இல் வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்தல்.
- நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கியமை.

**(08 புள்ளிகள்)**

## எட்டாவது ஹென்றி

- சமய சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஆரம்பத்தில் புரட்டாஸ்தாந்து மதத்தை ஏற்றுக்கொள்ளாமை.
- பாப்பரசருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தமை.
  (லியோ பாப்பரசருக்கு சமயப் பாதுகாவலர் என்ற கௌரவப் பெயரை வழங்குதல்.)

Department of Examinations - Sri Lanka

- கிளமென்ட் பாப்பரசர் ( கோல்டன் றோஸ் ) தங்க ரோஜா என்ற கௌரவப்பட்டத்தை அரசனுக்கு வழங்குதல். எனினும் விவாகரத்துப் பெறுவதற்குப் பாப்பரசர் அனுமதி வழங்காததின் காரணமாக மன்னனை புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியமை.

- பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று கதரின் மகாராணியை விவாகரத்துச் செய்து ஆன்பொலினைத் திருமணம் செய்தல்.

- கத்தோலிக்க சபைக்குச் சொந்தமான வருமான வழியைத் தடை செய்து அந்த வருமானத்தை தேசிய அரசின் நலனுக்காகப் பயன்படுத்தியமை.

- உரோமுக்கு மேன்முறையீடு செய்தலைத் தடை செய்தமை

- பாப்பரசரின் ஆதிக்கத்திலிருந்து இங்கிலாந்தை விடுவித்தமை.

- இங்கிலாந்தின் திருச்சபைக்குத் தலைவனாகத் தன்னை நியமித்துக்கு கொண்டதுடன் பாராளுமன்றத்தில் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

- பாராளுமன்றத்தை மன்னனுக்குத் கீழ்ப்பட்ட நிறுவனமாக ஆக்குதல்.

**(08 புள்ளிகள்)**

(iii) **இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சியின் பின்னணி**

- இங்கிலாந்தில் வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்து சென்றமை.

- பொருள்களின் கேள்வி அதிகரிப்பும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவையும் ஏற்படுதல்

- இங்கிலாந்தில் விஞ்ஞான,தொழில்நுட்ப கல்வி அறிவு என்பன விருத்தி அடைந்திருத்தல்.

- வர்த்தகம் விருத்தியடைந்ததின் பிரதிபலனாக மூலதனத்தைப் பெற்றிருந்த செல்வந்தர் குழு தோன்றியிருந்தமை.

- விவசாய புரட்சி (இரண்டாம் காணி அடைப்பு இயக்கம்) காரணமாக காணி உரிமை இழந்தவர்கள் வேலை இல்லாத குழுவினர் தோன்றியிருந்தமையும் அவர்கள் வேலை தேடி நகரங்களுக்குப் புலம் பெயர்தலும்.

- கைத்தொழிலுக்கான மூலப் பொருள்களை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தமை.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

## (iv) நெப்போலியன் போனபாட்டின் உள்நாட்டுக் கொள்கை

- சுய ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் அரசாட்சியைத் தாபித்தலும் பொது சன அபிப்பிராயம் மூலம் தனது செயற்பாடுகளுக்கு மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளுதலும்.

- நிர்வாக ஒருற்கிணைப்பை ஏற்படுத்தல் பிராந்திய நிர்வாகத்தை ஒழுங்குமுறைப்படுத்தியதுடன் அதற்கென பிடரபெக்ட்மாரை நியமித்தலும்.

- நீதியான வரி முறையும் ஆற்றல் திறமை என்பவற்றுக்கேற்ப பதவிகளுக்கு நியமிக்கும் முறையும் நடைமுறைப் படுத்தப்பட்டமை.

- பாப்பரசருடன் ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு திருச்சபைக்கும் அரசுக்கும் இடையில் நிலவிய மோதலில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியமை.

- நெப்போலியன் சட்டத்தொகுதி மூலம் பிரான்சில் பொதுவான சட்ட முறையினை வழங்குதல் பிரான்சியப் புரட்சியின் அடிப்படைக் கொள்ளைகள் பல அதில் அடக்கியிருந்தமை.

- புரட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் சென்று எல்லா முக்கிய நகரங்களிலும் லைசீஸ் அல்லது உயர்தரப் பாடசாலைகளும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக பாரிசில் ஒரு பாடசாலையும் தாபிக்கப்படுதல். பரிசில் தேசிய பல்கலைக்கழகத்தைத் தாபித்தல்.

- பிரான்ஸை வலுப்படுத்துவதற்கு உதவியாகும் நிதி, மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

# C பகுதி

**06) விக்டர் இமானுவேல் மன்னன், கபூர், கரிபோல்டி ஆகியோரின் வகிபாகத்தை மதிப்பீடு செய்து 1848 இலிருந்து 1870 வரையுள்ள காலப்பகுதியல் இத்தாலியை ஐக்கியப்பத்திய முக்கிய சந்தர்ப்பங்களைப் பரிசீலிக்குக.**

- விக்டர் இமானுவேல் மன்னன் ,கபூர், கரிபோல்டி ஆகிய தலைவர்கள் மூவரும் இத்தாலியை ஐக்கியப்படுத்திய நடவடிக்கையின் முக்கிய சந்தர்ப்பங்கள் மூன்றினைப் பிரநிதித்துவம்படுத்துகின்றனர்.

**விக்டர் இமானுவேல் மன்னன்**

- பீட்மொன்ட் சார்டீனியா இராச்சியத்திலே சுதந்திர அரசியல் முறையினை நடைமுறைப்படுத்தல்.
- பிரதம மந்திரியாக கபூரை நியமித்தலும் அவனது நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கியமையும்.
- **கபூர்** 1852-1861 வரையான காலப்பகுதியில் பீட்மொன்ட் சார்டீனியா இராச்சியத்தில் பிரதமமந்திரியாக பலம் வாய்ந்த இராச்சியமாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களை செயற்படுத்துதல். அதனூடாக அந்த இராச்சியம் இத்தாலியை ஐக்கியப்படுத்துவதில் தலைமைத்துவத்தைப் பெறுகின்ற தகுதி நிலையையும் பெறக்கூடியதாயிருந்தமை.
- ஐக்கியபப்டுத்தும் முதல் படிமுறையாக இத்தாலியில் நிலவிய ஆஸ்திரிய ஆதிக்கத்தைத் தோல்வியடையச் செய்வதற்கு வெளிநாட்டு உதவியைப் பெற வேண்டும் என்பதைப் விளங்கிக்கொண்டு அதற்காக பிரான்சின் உதவியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- பிரான்சின் உதவியுடன் ஆஸ்திரியாவுக்கு எதிரான போருடன் ஐக்கியப்படுத்தும் இயக்கம் ஆரம்பமாகுதல் லொம்பாடியா பீட் மொன்ட் சார்டீனியா இராச்சியத்துடன் இணைக்கப்பட்டமை. பர்மா , மொடீனா,தஸ்கனி, ரொமக்ஜா ஆகிய அரசுகளும் பீட்மொன்ட் சார்டீனியா இராச்சியத்துடன் ஒன்றிணைக்கப்படுதல்.

**கரிபோல்டி**

- தனது செஞ்சட்டை இராணுவத்தைப் பயன்படுத்தி தென் இத்தாலியில் இருந்த சிசிலி தீவு இராச்சியத்தை புர்போன் ஆட்சியாளர்களிடமிருந்து விடுவித்து பீட்மொன்ட் சார்டீனியா இராச்சியத்துக்கு வழங்குதல்.
- 1866 ஆஸ்திரியா பிரஷ்யா போர் - வெனிசீயாவை இணைத்துக் கொண்டமை.
- 1870 பிரான்ஸ் - பிரஷ்யா போர் உரோமைக் கைப்பற்றுதல்.
- இறுதி சந்தர்ப்பத்தில் விக்டர் இரானுவேல் மன்னனின் வழிக்காட்டலில் கீழ் வெற்றிகண்டது.

**(16 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**7) "1917 இல் போல்ஷ்விக் புரட்சி ரஷஜயாவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்தியது"**

**(i) 1917 வரை ரஷ்யாவை ஆட்சி செய்த இறுதி சார் மன்னனின் பெயரைத் தருக.**

இரண்டாம் நிக்கலஸ் **(01 புள்ளி)**

**(ii) போல்ஷ்விக் புரட்சியின் தலைவர்கள் இருவரின் பெயர்களைத் தருக.**

- வீ.ஐ. லெனின்
- லியோன் ட்ரொஸ்கி
- ஜோசப் ஸ்டாலின் **(02 புள்ளிகள்)**

**(iii) போல்ஷ்விக்குகள் ரஷ்யாவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதுவான காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

போல்ஷ்விக்குகளின் வெற்றிக்கு ஏதுவான காரணங்கள்

- சோவியத் சபைக்கும் தற்காலிக அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட பகைமை
- தற்காலிக அரசின் (மென்ஷ்விக்) வினைத்திறன் இன்மை.
- முதலாம் உலகப் போரின் தாக்கம் காரணமாக விவசாயிகளும் தொழிலாளர்களும் எதிர் நோக்கிய சமூக, பொருளாதார நெருக்கடி அதிகரித்தல். தொழிலாளர்களிலும் விவசாயிகளிலும் துன்பத்துக்குள்ளானவர்கள் புரட்சிவாதிகளுக்கு உதவி வழங்கியமை.
- ரஷ்யா முழுவதும் பரவிய வேலை நிறுத்த இயக்கம்.
- லெனின் ட்ரொஸ்கி ஆகியோரின் திறமையான தலைமைத்துவம்.
- போல்ஷ் விக்காரர்களின் ஒழுங்கமைப்பு பலம்.
- போரினால் இன்னலுக்குள்ளான இராணுவப்படையினரின் உதவியும் போல்ஷவிக்காரர்களுக்குக் கிட்டியமை.

**(4 புள்ளிகள்)**

**(iv) 1917 போல்ஷ்விக் புரட்சி ரஸ்யாவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்திய விதத்தைப் பரிசீலிக்குக.**

- உலகின் முதலாவது சமவுடைமை நாட்டை தோற்றுவித்தல்.
- போல்ஷ்ஷக்குகள் ரஷ்யாவின் உள்ளே பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்காமை இதனால் அரசியல் யாப்பு தயாரிக்கும் சபை கலைக்கப்பட்டு கொம்யூனிஸ்ட் கட்சியின் இயக்கம் கொண்ட அரசு தாபிக்கப்படுதல்.

Department of Examinations - Sri Lanka

- ஜெர்மனியுடன் பிரேஸ்ட்ட லிடொட்ஸ்க் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு போரிலிருந்து விலகுதல்.
- வெளிநாட்டு உதவி பெற்ற எதிர்ப்பு போராட்டங்களைத் தோற்கடித்தல்.
- பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் - புதிய பொருளாதாரக் கொள்கை.

**(09 புள்ளிகள்)**

**08) இடைப்பட்ட போர்க் காலத்தில் (inter war) ஜெர்மனியில் நாஸிசம் எழுச்சி பெறுவதற்கு ஏதுவான முக்கிய காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.**

- முதலாம் உலகப் போரின் பின்னர் அடோல்ப் ஹிட்லரின் கீழ் ஜெர்மன் தேசிய சமவுடைமை அல்லது நாசிஸ வாதம் எழுச்சி பெற்றமை.
- 1919 வேர்சேல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனிக்கு கடுமையான தண்டனை வழங்கியமை (உ+ம் பெருமளவு போர் நட்ட ஈடு விதிக்கப்படல், ஜெர்மனிக்கு உரித்தாக இருந்த குடியேற்ற நாடுகள் இல்லா தொழிந்தமை முதலியன)
- குவேமார் குடியாட்சியின் பலவீனம் .
- 1929 உலக பொரளாதார நெருக்கடி காரணமாக ஜெர்மனி எதிர்நோக்கிய கடுமையான பொருளாதாரக் குறைபாடு.
- ஹிட்லரின் தலைமைத்துவ ஆளுமை.
- இத்தாலிய பாஸிச வாதத்தின் முன்மாதிரியைப் பெறுதல்.
- இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் ஹிட்லரின் எழுச்சி தொடர்பில் உதாசீனமான கொள்கையைப் பின்பற்றுதல்.
- சர்வதேச சங்கத்தின் தோல்வி.

**(16 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**09) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

(i) **வியன்ன மகாநாடு**

(ii) **பிஸ்மார்க்**

(iii) **பெனிடோ முசோலினி**

(iv) **1980 வரை சமாதானத்தைப் பாதுகாக்கும் நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபையின் வகிபாகம்**

**(08 × 2 = 16 புள்ளிகள் )**

(i) **வியன்னா மகாநாடு**

நெப்போலியன் போன பார்ட்டை தோல்வியடையச் செய்த பின்னர் ஐரோப்பிய வல்லரசுகள் வியன்னாவில் ஒன்று கூடி நடத்திய மகாநாடு இப் பெயரால் குறிப்பிடப்படுகின்றது.

**நோக்கம்**

- நெப்போலியனால் சிக்கலுற்றுள்ளதெனக் கருதப்படும் ஐரோப்பாவை மீண்டும் ஒழுங்குபடுத்தல் பிரான்சிய புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் நிலவிய அரச பரம்பரை மற்றும் நாட்டின் எல்லைகளை மீண்டும் ஏற்படுத்தல் (நிரந்தர வம்ச முறை)

- தடை அரசுகளை உருவாக்குதலும் ஆதிக்கத்தை சமப்படுத்தலும்.

- **வியன்ன இணக்கப்பாட்டின் ஏற்பாடுகள்**
  - பிரான்சிய புரட்சிக்கு முன்னர் நிலவிய தேச எல்லையை மீண்டும் தாபித்தல். புர்போன் அரச வம்சத்துக்கு மீண்டும் ஆதிக்கத்தை வழங்குதல். யுத்த இழப்பீடு விதித்தல்.
  - ஜெர்மனி – அரச பகுதிகள் 363 எண்ணிக்கையிலிருந்து 39 ஆகக் குறைத்தல்
  - ஆஸ்திரியா – லொம்பார்டியாவையும் / வெனிஷியாவையும் வழங்குதல்
  - பிரஷ்யா – அரச பகுதிகளை இணைத்து விரிவாக்குதல்.

- இத்தாலி நிடரந்தர முறைமை இத்தாலியில் கடுடமையாக செயற்பட்டமை.

**விளைவுகள்**

- தேசியவாதம், தாராண்மை வாதம் என்பவற்றை அடக்குவதற்கு முயற்சித்தல் ( மெட்டர்னிக் முறை ) ஐரோப்பா மகாநாடு முறை.

- பிரான்சின் தேச எல்லை 1789 இன் முன்னர் இருந்த நிலைமைக்குக் கொண்டு செல்லல. புர்போன் அரச வம்சம் மீண்டும் ஆதிக்கத்தைத் தாபித்தல்.

- முன்பு நிலவிய 360 இற்கும் அதிகமான இராச்சிய பகுதிகள் எண்ணிக்கைக்குப் பதிலாக ஜெர்மனியில் இராச்சிய பகுதிகள் 39 ஏற்படுத்தல். ஜெர்மனி கூட்டமைப்பை தாபித்தலும் அதன் தலைமைத்துவத்தை ஆஸ்திரியாவுக்கு வழங்குதலும்.

- ஜெர்மனியின் பிரதேசத்தில் ஆஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்கும் இடையில் ஆதிக்க சமநிலையை ஏற்படுத்தல். ஆஸ்திரியாவுக்கு லொம்பார்ட், வெனிஷியா என்பவற்றை வழங்குதல். பிரஷ்யாவுக்கு மேலதிக பிரதேசங்களை வழங்குதல்.

**(8 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

(ii) **பிஸ்மார்க்**

- ஜெர்மனியை ஐக்கியப்படுத்தலில் முக்கிய தலைவனான ஒட்டோவன் பிஸ்மார்க் 1815 இல் பிரஷ்யாவில் நில உரிமையாளர்களான ஜன்கந்பிரபு குடும்பத்தில் பிறந்தவர்.

- 1847 இல் பிரஷ்யாவின் டயட் சபையில் உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர் கடும் பழைமைவாதியாக இருந்தமை 1848-49 புரட்சியின் போது புரட்சியாளர்களுக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த பிஸ்மாக் முடியாட்சியை பாதுகாப்பதற்கு பிரஷ்யாவில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.

- 1859-62 காலப்பகுதியில் ரஷ்யா மற்றும் பிரான்ஸில் பிரஷ்யாவின் தூதுவராக செயற்படுதல்.

- 1862 இல் பிரஷ்யாவின் பாராளுமன்றத்தில் லிபரல் வாதிகளுக்கும் மன்னனுக்கும் இடையில் மோதல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அதனைத் தீர்ப்பதற்கு பிரஷ்யாவின் சான் சிலராக நியமிக்கப்படுதல்.

- 1862 இல் பிஸ்மார்க் பிரஷ்யாவின் சான்சிலராக நியமிக்கப்படல். அவர் பிரஷ்யாவின் தலைமைத்துவத்தின் கீழ் பிரஷ்யாவின் ஆதிக்கத்தை ஜெர்மனி முழுவதும் பரவச் செய்து ஜெர்மனியை ஐக்கியப்படுத்த திடசங்கற்பம் பூண்டிருத்தல்.
  - 1864 ஷ்லெஸ்விக், பிரான்சிய இராணுவத்தைப் பயன்படுத்துதல், ஹொல்ஸ்டயின் அடிப்படையாகக் கொண்டு ஆஸ்திரியா பிரஷ்யாவினால் டென்மார்க் தோற்கடிக்கப்படுதல்.
  - 1866 ஆஸ்திரியா - பிரஷ்யாவுக்கு இடையில் ஏற்பட்ட ஏழு கிழமைப் போர் - பிரஷ்யா ஜெர்மனி ஜெர்மனியின் முக்கியமானதும் பலம் மிக்கதுமான எழுச்சி பெறுதல்.

- 1870 - 1871 பிரான்ஸ் பிரஷ்யாயுத்தம் - தெற்கு ஜேர்மன் இராச்சியம் வட ஜேர்மன் கூட்டுடன் இணைக்கப்படுதல்.

- ஜெர்மன் பேரரசின் முதலாவது சான் ஆகியமை.

- ஜெர்மனியின் பாதுகாப்பு கருதி ஐரோப்பிய நாடுகளுடன் உடன்படிக்கை முறையினை ஏற்படுத்தல்.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(iii)**பெனிட்டோ முசோலினி**

- இத்தாலியின் பாஸிசவாதி தலைவன் .
- ஆரம்பத்தில் சமூகவாதியாக இருந்த அவர் பின்னர் 1919 இல் இத்தாலியில் பாஸிச கட்சியை ஆரம்பித்தமை
- பின்னர் இரு வருடங்களின் பின்னர் கறுப்புச் (கறுஞ் ) சட்டைப் படையுடன் உரோமைத் தாக்கி இத்தாலியின் ஆதிக்கத்தைக் கைப்பற்றுதல்.
- இத்தாலியின் பிரதம மந்திரியாக சர்வதிகாரக் கொள்கையைப் பின்பற்றுதல்.
- 1936 அபிசீனியாவை ஆக்கிரமிப்புச் செய்தல்
- 1940இல் அச்சு கட்சியில் இரண்டாம் உலகப் போரில் நுழைதல்.
- 1943 இல் நிர்வாக ஆதிக்கத்தைக் கைவிட நேர்ந்தமை.
- போர் முடிவடைவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் 1945 இல் கொலை செய்யப்படுதல்.

**(8 புள்ளிகள்)**

(iv) **1980 வரை சமாதானத்தைப் பாதுகாக்கும் நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபையின் வகிபாகம்**

இக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை வெற்றிகளைப் பெற்றுக் கொண்டதாகக் கூற முடியும் சிறப்பாக அமைதியைப் பேணுவதில் அது சில சந்தர்ப்பங்களில் வெற்றியை அடைந்துள்ளது கொங்கோவில் உள்நாட்டு யுத்தம் மேற்கு நியூகினியா தொடர்பாக ஒல்லாந்து இந்தோனேஷியா இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு போன்ற பெரும் வல்லரசுகள் நேரடியாகத் தொடர்புறாத பிரச்சினை தொடர்பாக ஐ.நா . சபையின் சமாதானமான முயற்சி வெற்றியடைந்தது எனினும் வல்வரசுகளின் நோக்கத்தோடு முரண்படும் சந்தர்ப்பங்களில் அமைதி முயற்சி தோல்வியடைதல்.

ஐ.நா. சபை தலையீடு செய்த குறிப்பிடத்தக்க உலக நெருக்கடிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- 1946- ஒல்லாந்து ஆட்சியிலிருந்து கிழக்கு இந்திய தீவுகள் சுதந்திரம் பெறுவதற்கு உதவுதல்.
- பலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடு ( முழுமையான அமைதி ஏற்படுவதில் தோல்வி)
- 1956-53 கொரியன் பிரச்சினை
- 1956- சூயஸ் பிரச்சினை.
- 1936 ஹங்கேரிய மக்கள் எழுச்சியடைதல்
- பெல்ஜியம் கொங்கோ சிவில் யுத்தம் .
- சைப்ரஸ் பிரச்சனை.
- காஷ்மீர் பிரச்சனை.
- 1968 செக்கஸ்லோவேக்கிய நெருக்கடி
- 1976 ரஷ்யாவினால் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப்படுதல்.

**(08 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka